www.padippakam.com



# வட்டகாமினிக்காய் தமிழர்களை எதிர்த்த பிராமணன்

8

## காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை...

தொடர்கின்ற வரலாற்று மோசடிகளும் துரோகங்களும்

வரலாற்றுத் தொடர்

ஒரு அந்நியப் படையெடுப்பாளனை ஒரு சுதேச மன்னன் வெற்றி கொண்டால் அதன் பின் வரக்கூடிய ஆட்சியென்பது மக்கள் ஆதரவு பெற்ற பலம் மிக்க நிலையான ஆட்சியாக இருக்கும். மகாவம்சம் குறிப்பிடுகிறபடி எல்லாளன் ஒரு சோழப் படையெடுப்பாளனாக இருந்திருந்தால் அவனது வீழ்ச்சியின் பின் அனுராதபுரத்தில் குழப்பமில்லாத நிலையான ஆட்சி ஏற்பட்டிருக்க வேண்டும். ஆனால் எல்லாளனுக்குப் பின் வந்த நூறு வருட காலத்துக்கு அங்கே அவ்வாறு ஒரு நிலையான ஆட்சி இருந்ததாகத் தெரிய வில்லை.

### மகாவம்சத்திலே குழப்பம்

எல்லாளனது ஆட்சிக் காலம் கி.மு. 145 ஆண்டு முதல் கி.மு. 101 ஆம் ஆண்டு என வரையறை செய்யும் மகாவம்சம் கி.மு. 103 ஆம் ஆண்டில் வட்டகாமினி என்பவனது ஆட்சி ஏற்பட்டதாகச் சொல்லுகிறது. அதே சமயம் வட்டகாமினி வேறு துட்டகாமினி வேறு என்றும் சொல்லப்படுகின்றது(1).

இந்த வட்ட காமினியும், துட்ட காமினியும், ஒரே நேரத்தில் ஆட்சியில் இருந்தார்களா? அல்லது இருவரும் ஒருவர்கள் தானா? என்பதும் குழப்பமாகவே உள்ளது. கி.மு.102 ஆம் ஆண்டில் அதாவது எல்லாளன் இறந்து ஒரு வருட காலத்தில் மீண்டும் தமிழர் ஆட்சி அங்கு ஏற்பட்டதாக மகாவம்சம் சொல்கிறது.

### தமிழர்களை எதிர்த்த பிராமணன்

வட்டகாமினி பதவி ஏற்ற ஒரு வருட காலத்தில் மாதோட்டத்தில் வந்திறங்கிய தமிழர் படை அனுராதபுரத்தை நோக்கிப் படையெடுத்து வந்தது. அதே நேரம் தெற்கே உருகுணையிலிருந்த தீசன் என்னும் பிராமணனும், வட்டகாமினிக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தான். இரு முனை எதிர்ப்புகளையும் ஒரே நேரத்தில் சமாளிக்க முடியாத வட்டகாமினி தீசனுடன் சமாதானம் செய்து கொண்டு. அவன் (தீசன்) தமிழர் படையை எதிர்த்து வெற்றி கொண்டால் ஆட்சியில் ஒரு பங்கு தருவதாகச் சொன்னான். அதற்கு ஒப்புக் கொண்ட தீசனும் வட்ட காமினிக்காக தமிழர் படையுடன் போரிட்டுத் தோல்வி கண்டு உயிரிழந்தான். வெற்றி கொண்ட தமிழர் படை அனுராதபுரம் நோக்கி முன்னேறி 'கொலம்பாகல' என்ற இடத்தில் வட்டகாமினியின் படையுடன் போரிட்டது. இந்தப் போரில் தோல்விகண்ட வட்ட காமினி மலையரட்டைக்கு (மலைநாடு) தப்பியோடி அங்கே இருந்த பௌத்த விகாரையில் தஞ்சமடைந்ததாக மகாவம்சம் சொல்கிறது.

### அனுராபுரத்தில் மீண்டும் தமிழர் ஆட்சி

அதன் பின் புலகதன், பழையமாறன், பிழைய மாறன், தாதிகன் ஆகிய தமிழர்கள் 14 வருடங்கள் 7 மாதங்கள் (கி.மு.102. கி.மு.87) வரை அனுராதபுரத்தில் ஆட்சி செய்ததாகச் சொல்லப்படுகின்றது. இவர்களை மாதோட்டத்தில் வந்திறங்கிய தமிழர் படையெடுப்பாளர்கள் என்று மட்டும் குறிப்பிடும் மகாவம்சம் அதற்கு மேல் ஒன்றும் சொல்லவில்லை. மகாவம்சப் பாரம்பரியத்தில் ஊறிய சிங்கள வரலாற்றாசிரியரான மெண்டிஸ் 'பழைய மாறன்', 'பிழைய மாறன்' என்ற பெயர்கள் சங்க இலக்கியத்தில் பாண்டியரைக் குறிப்பிடும் 'மாறன்' என்ற பெயருடன் ஒத்திருப்பதால் இவர்கள் தமிழ் நாட்டிலிருந்து படையெடுத்து வந்த பாண்டிய வம்சத்தவர்(2) என்று நிறுவ முற்பட்டார். ஆனால் இத்கைய பெயர்கள் இவர்களது ஆட்சிக்காலத்திற்கு முன்பே இலங்கையின் பல பகுதிகளிலும் நிலவி வந்தமையும், இவர்கள் தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் சமகாலத்தில் வாழ்ந்த இனக்குழுவினர்(3) என்பதையும் தமிழ் வரலாற்றாசிரியர்கள் வலியுறுதினர்.

### மீண்டும் வட்டகாமினி


கி.மு.87 இல் மீண்டும் அனுராதபுரத்தைக் கைப்பற்றி ஆட்சிக்கு வந்த வட்டகாமினி,தான் அனுராதபுரத்தை விட்டுத் தப்பியோடிய காலத்தில் தனக்கு ஆதரவளித்த பௌத்த, பிக்குமாருக்கு நன்றிக் கடன் செலுத்துமுகமாக பௌத்த பிக்குமாருக்கும், பௌத் விகாரைகளுக்கும் வருமானம் கிடைக்கும் வகையில் நிலத்தைத் தானம் வழங்கும் முறையையும், சன்மானம் வழங்கும் முறையையும் அறிமுகம் செய்து வைத்தான். இது பௌத்த மதத்தையும், பௌத்தசங்கத்தையும் ஆதரித்து வளர்ப்பதற்கு அவன் தொடக்கி வைத்த சிறந்த முன்மாதிரி என மகாவம்சப் பரம்பரையினர் பெருமை கொள்கின்றனர். ஆனால் கௌதம புத்தரின் போதனைக்கு நேர் எதிர்மாறான இந்தப் பழக்கம், புத்த பிக்குகளை சொத்தும் பொருளும் சேர்ப்பதில் ஈடுபாடு உள்ளவர்களாகவும் எந்தவித உடல் உழைப்பிலோ உற்பத்தி வேலைகளிலுமோ ஈடுபடாத புல்லுருவிகளாகவும் மாற்றிவிட்டது. பௌத்த சங்கம் அனைத்து மக்களின் விமோசனத்துக்கும் நல்வாழ்வுக்கும் பாடுபட வேண்டும் என்ற அதனது ஸ்தாபகரது நோக்கத்திற்கு எதிர்மாறாக சங்கத்திற்குச் சொத்து சேர்ப்பதற்கும், சங்கத்தை ஆதரிக்கக் கூடிய மன்னர்களை மட்டும் ஆதரித்து யுத்தங்களைத் தூண்டிவிடும். சுயலாபச் சங்கமாக மாற்றி விட்டது(4).

### மீண்டும் தமிழர் ஆட்சி


வட்டகாமினிக்குப் பின் ஆட்சிக்கு வந்த மகா தீசன் காலத்தில் (கி.மு.76- கி.மு.62) அனுராதபுரத்தில் அமைதியான ஆட்சி நடைபெறவில்லையென்றும் பல்வேறு குழப்பங்கள் அப்போது நிகழ்ந்ததாகவும் அறிய முடிகின்றது. அனுராதபுர அரச மரபைச் சேராத சேரசநாகன் என்பவன் ஆட்சியைக் கைப்பற்றியதாகவும், இவன் தனக்கு ஆதரவளிக்காத பௌத்த விகாரைகளை இடித்துத் தரைமட்டமாக்கியதாகவும் மகாவம்சம் குறிப்பிடுகின்றது. இவன் அனுராதபுர அரச மரபைச்சாராதவன் என்றால் அதுவும் பௌத்த விகாரைகளை இடித்துத் தள்ளிய பௌத்த எதிர்ப்பாளனென்றால் எங்கிருந்து வந்தவன்? எந்த அரச மரபைச் சார்ந்தவன்? என்பதற்கான குறிப்புக்கள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை. இவனது பெயரைக் கொண்டு இவன் இலங்கையின் பூர்வீகத் திராவிடக் குடிகளில் ஒன்றான நாகர் இனக் குழுவைச் சார்ந்த சிற்றரசனாக இருக்கலாம் என நம்பப்படுகின்றது. இவன் பௌத்த விகாரைகளை இடித்ததை ஏற்றுக் கொள்ளாத இவன் மனைவி அனுலாதேவி தமிழர்களாகிய வடுகன், நீவியன் ஆகியோரை மன்னர்களாக்கியதாகச் சொல்லப்படுகின்றது.

### மகாவம்சத்தில் முரண்பாடு

எல்லாளனை சோழப் படையெழுப்பாளனாகவும், பௌத்த மதத்தைச் சார்ந்தவனாகவும் குறிப்பிட்டு பௌத்த மன்னனான துட்டகாமினி அவனை வெற்றி கொண்ட நிகழ்வை, மிகப்பெரிய வரலாற்றுச் சாதனையாகவும் சொல்லும் மகாவம்சப் பரம்பரையினர், விகாரைகளைத் தரைமட்டமாக்கி பௌத்த எதிர்ப்பை வெளிப்படுத்திய சேரநாகனுக்குப் பதிலாக அவனது மனைவியே அவனது ஆட்சியை வீழத்தி தமிழர்களது ஆட்சியை ஏற்படுத்தியதாக ஒத்துக் கொள்கின்றனர். அன்றைய காலத்தில் இவர்கள் இப்போது சொல்வது போல தமிழ் சிங்கள இன முரண்பாடுதான் உண்மையான முரண்பாடாக இருந்திருந்தால் பௌத்தத்தை கடைப்பிடித்தவர்கள் சிங்களவர்களாக மட்டுமே இருந்திருந்தால் பௌத்தத்தை எதிர்த்த தமிழர்களை பௌத்தத்தின் எதிரியான ஒருவனுக்குப் பதிலாக ஆட்சிக்குக் கொண்டு வருவதற்கு சாத்தியமே இல்லை என்பது யதார்த்த உண்மையாகும்.



பௌத்த புனிதச் சின்னம்



தேரவாத பௌத்தத்தின் மகாவிகாரை

### வடநாடு தென்னாடு

வட்ட காமினியின் காலம் தொட்டு அதன்பின் வந்த சேரநாகன் காலம் வரை அனுராதபுரத்தில் நிகழ்ந்த படையெடுப்புக்கள் குழப்பங்கள் கலவரங்கள் இன அடிப்படை கொண்டதாக இருக்கவில்லை. தேரவாதப் பௌத்தம் ,மகாயானப் பௌத்தம், பூர்வீக (இந்து) மதம், வைதீக இந்துமதம், ஆகிய நான்கு மதப் பிரிவுகளுக்கிடையேயான மோதல்கலாகத்தான் அவற்றைப் பார்க்க வேண்டும். இதில் தேரவாதப் பௌத்தமும், வைதீக இந்து மதமும் ஓரணியிலும், மகாயான பௌத்தமும் பூர்வீக (இந்து) மதமும் இன்னோர் அணியிலும் அணி திரண்டிருந்தனர். முதல் அணியினர் வடநாட்டுப் பாரம்பரியத்தைத் தூக்கிப் பிடித்தவர்கள். இரண்டாவது அணியினர் தென்னாட்டு (தமிழகம், இலங்கை) பாரம்பரியத்தை கடைப்பிடித்தவர்கள். இதுவே பிரச்சனைக்கு அடித்தளமாத இருந்தது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

### நாகதீப அரசர்கள்

வட்டகாமினியின் ஆட்சிக் காலத்தில் மாதோட்டத்தில் வந்திறங்கிய தமிழர் படையை குடா நாட்டிலிருந்து சென்ற பூர்வீக (இந்து) மதப் பிரிவைச் சேர்ந்த தமிழர் படையாகவே பார்க்க வேண்டும். குடா நாட்டிலிருந்து தரை வழியாக அனுராத புரத்திற்கு வந்து சேர்வதை விட், குடாநாட்டிலிருந்து கடல் வழியாக மாதோட்டம் வந்து அங்கிருந்து அனுராதபுரம் செல்வது சுலபமானதும் தூரம் குறைந்த்த வழியுமாகும் என்ற விடயம் இங்கே கவனிகப்பட வேண்டும். குடா நாட்டில் இருந்த, 'நாகதீப' அரசு அல்லது அரசுகள் அனுராதபுர அரசுகளுக்கு சமமான நாகரிகத்தையும் வளர்ச்சியையும் கொண்டிருந்தமையும், அக் காலத்தில் மிகப் புகழ் பெற்றிருந்த மாதோட்டத் துறை முகம் நாகதீப அரசின் கட்டுப்பாட்டிலேயே இருந்ததால் அவர்களிடம் வலிமை மிக்க கடற்படை இருந்திருக்க சாத்தியம் உண்டு என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். அடுத்து வட்டகாமினியின் மீது படையெடுத்த 'தீசனை' பிராமணன் என்று மட்டுமே குறிப்பிடும் மகாவம்சம் இவர்களை தமிழப் படையெடுப்பாளர்கள் என்று குறிப்பிடுவது முக்கியமான ஒன்றாகும்.

1. ப. புஸ்பரத்தினம் - ஆதிகால இலங்கைத் தமிழர் வரலாறு.
2. ப. புஸ்பரத்தினம் - ஆதிகால இலங்கைத் தமிழர் வரலாறு.
3. சி. க. சிற்றம்பலம்
4. சண்முகதாசன் - மாக்சியப்பார்வையில் இலங்கைவரலாறு.

- நக்கீரன்

படிப்பகம்